குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (23.05.2025) குன்றத்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.2.95 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபங்களை திறந்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றினர். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் நகர் மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, மண்டல இணை ஆணையர் சி.குமரதுரை, துணை ஆணையர்கள் எம்.ஜெயா. கே.சித்ராதேவி, உதவி ஆணையர் ஆர்.கார்த்திகேயன். திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எ.செந்தாமரைக்கண்ணன் மற்றும் அறங்காவலர்கள். குன்றத்தூர் திருக்கோயில் செயல் அலுவலர் சீ.ஸ்ரீகன்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் அலுவலர்கள் உள்ளனர்.

குன்றத்தூரில், ரூ.2.95 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய திருமண மண்டபங்கள்!

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தனர்!

சென்னை, மே.24-

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (23.05.2025) குன்றத்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.2.95 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபங்களை திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து, குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் அரசு விழாவில் கலந்து கொண்டு இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கினர்.

2021-2022 ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற அறிவிப்பில் "குன்றத்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் புதிய திருமண மண்டபங்கள் கட்டப்படும்" என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் ரூ.2.95 கோடி செலவில் 6 புதிய திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு இன்று (23.05.2025) மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் குன்றத்தூரில் கொண்டாடப்பட்டு வரும் தெய்வச் சேக்கிழார் அரசு விழா குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டபத்தில் மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. நேற்று நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் தா.மோ.அன்பரசன் மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினர். நிறைவாக புலவர் மா.ராமலிங்கம் தலைமையில் ஆன்மிக பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை,

மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் நகர் மன்றத் தலைவர் கோ.சத்திய மூர்த்தி, மண்டல இணை ஆணையர் சி.குமரதுரை, துணை ஆணையர்கள் திருமதி எம். ஜெயா, திருமதி கே.சித்ரா தேவி, உதவி ஆணையர் ஆர்.கார்த்திகேயன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எ.செந்தாமரைக்கண்ணன் மற்றும் அறங்காவலர்கள், குன்றத்தூர் திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி சீ.ஸ்ரீகன்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் பிறந்தநாள்: சென்னை கிழக்கு மாவட்டத்தில்

அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்! நடைபெறும் இடங்கள்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு அறிவிப்பு!

சென்னை, மே.24-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் "அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்" 25.05.25 முதல் 06.06.25 வரை நடைபெறும் இடங்களின் விவரங்களை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

"அன்னம் தரும் அமுத கரங்கள்" கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:-

நாள் 25.5.25 ஞாயிற்றுக் கிழமை 95 ஆம் நாள்

திரு.வி.க நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 74 அ - பாஷ்யம் தெரு, மணிக்கூண்டு அருகில், வட்டச் செயலாளர் ஜி. கிருஷ்ணகுமார்

2) வட்டம் 71 - பாரதி சாலை பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் பரிமளா சுரேஷ் பாபு

நாள் 26.5.25 திங்கள் கிழமை 96 ஆம் நாள்

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 95- மேட்டுத் தெரு, வில்லிவாக்கம் செயலாளர், மா.அகிலன்

2) வட்டம் 95 அ - பாரதி நகர், 2வது தெரு, செயலாளர், பா. ஜானி

நாள் 27.5.25 செவ்வாய்க் கிழமை 97 ஆம் நாள்

திரு.வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 76 - செல்லப்பா தெரு ஸ்டாரன்ஸ் ரோடு ஓட்டேரி இந்தியன் வங்கி எதிரில், வட்ட செயலாளர்: எஸ். சசிகுமார்

2) வட்டம் 76அ - கோவிந்தபுரம் பட்டாளம் ஆஞ்சநேயர் கோயில் அருகில், வட்ட செயலாளர் எஸ்.வெங்கடேசன்

நாள் 28.5.25 புதன் கிழமை 98 ஆம் நாள்

அம்பத்தூர் வடக்கு பகுதி

1) வட்டம் 85- நடேசன் முதலியார் தெரு வரதராஜபுரம், வட்ட செயலாளர் த.கண்ணபிரான்

2) வட்டம் 86- அன்னை சத்யா நகர் முத்துமாரியம்மன் கோயில் தெரு, வட்ட செயலாளர் எம்.கமல். எம்சி,

நாள் 29.5.25 வியாழக் கிழமை 99 ஆம் நாள்

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

1) வட்டம் 96- பாளையகார தெரு புதுத்தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் எ.வேதா

2) வட்டம் 98 ஆ- கலைஞர் கருணாநிதி நகர் 1வது தெரு, 11 வது தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் காஞ்சி. செ.துரை

நாள் 30.5.25 வெள்ளிக் கிழமை 100 ஆம் நாள்

கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 69- ஜி.கே. எம். காலணி 2 வது தெரு, வட்ட செயலாளர் எம். ஜெ.சி.பாபு

2) வட்டம் 64 அ - ராஜாஜி நகர் காமராஜ் தெரு வில்லிவாக்கம், வட்ட செயலாளர் எம்.டி.தமிழ் செல்வன்

நாள் 31.5.25 சனிக்கிழமை 101 ஆம் நாள்

1) துறைமுகம் மேற்கு பகுதி

வட்டம் 59 - என்.எஸ்.சி. போஸ் ரோடு (டெலிபோன் ஆபீஸ்) எதிரில், வட்ட செயலாளர் டி. சதீஷ் குமார்

2) துறைமுகம் கிழக்கு பகுதி

வட்டம் 55 ஆ - கோவிந்தப்பா தெரு, தாத்தா முத்தையப்பன் தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் ஆர்.ஏ. அஸ்லாம்

நாள் 1.6.25 ஞாயிற்றுக் கிழமை 102 ஆம் நாள்

அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 84 அ பஜனை கோயில் பட்டறைவாக்கம், வட்ட செயலாளர் த.வ. லால்

2) வட்டம் 84 கொரட்டூர் பேருந்து நிலையம், வட்ட செயலாளர் மூ. விஜயகுமார்

நாள் 2.6.25 திங்கட் கிழமை 103 ஆம் நாள்

கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 67 அ- தீட்டி தோட்டம் ஆறாவது தெரு நித்யா டீ கடை அருகில், வட்ட செயலாளர் கே. ஜார்ஜ்

2) வட்டம் 67 - மதுரை சாமி மடம் (உருது பள்ளி அருகில்), வட்ட செயலாளர் என்.பொன்முடி

நாள் 3.6.25 செவ்வாய்க் கிழமை 104ஆம் நாள்

எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 77 அ - சுந்தரபுரம் வட்ட செயலாளர், வி.அபாய்

2) வட்டம் 78 அ - சூளை அங்காளம்மன் கோயில், வட்ட செயலாளர் நா.பாலு

நாள் 4.6.25 புதன்கிழமை 105 வது நாள்

1) துறைமுகம் மேற்கு பகுதி

வட்டம் 59 அ- காந்திநகர் ஆறாவது பிரதான சாலை பல்லவன் சாலை, வட்ட செயலாளர் வே. பா. பிரபாகரன்

2) துறைமுகம் கிழக்கு பகுதி

வட்டம் 60 - 4 வது கடற்கரை சாலை கோபால் செட்டி தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் க.கவியரசு

நாள் 5.6.25 வியாழக் கிழமை 106 ஆம் நாள்

அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 89- இளங்கோ நகர் பஸ் நிலையம் ஆபிஸர்ஸ் காலனி (இளங்கோ விளையாட்டு மைதானம்) மாமன்ற உறுப்பினர் எம்.அ.சேகர்.

2) வட்டம் 93- வீரமாமுனிவர் சாலை நக்கீரன் சாலை சந்திப்பு முகப்பேர் கிழக்கு ரேஷன் கடை, வட்ட செயலாளர் ஆர். டீக்கா

நாள் 6.6.25 வெள்ளிக் கிழமை 107 ஆம் நாள்

எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 108 - சுப்புராயன் தெரு (வெங்கடாசலபதி தெரு சந்திப்பு) வட்ட செயலாளர் வான்மதி கதிரவன்

2) வட்டம்108 அ- தென் மகளபுரம் சேத்துப்பட்டு வட்ட செயலாளர் எல்.சுந்தர்ராஜன்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 93வது நாள்!

துறைமுகம் மேற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே.24-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 93 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (23.5.2025) துறைமுகம் மேற்கு பகுதி: 1) வட்டம் 55அ, அம்மன் கோயில் சடையப்பன் மேஸ்திரி தெரு, சந்திப்பு ஏழுகிணறு. 2) வட்டம் 57 - கல்யாணபுரம் பள்ளம் அருகில், ரேஷன் கடை, வால்டாக்ஸ் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.

சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ்

துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி,

பா.அண்ணா துரை, டி.சதிஷ்குமார், வே.பா. பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடி கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரை!

திருப்பெரும்புதூர் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரையாற்றுகின்றார்!

காஞ்சிபுரம், மே 24 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (24.5.2025 - சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு தில்லை மஹால் திருமண மண்டபம், படப்பையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் - மாவட்டக் குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், குறு -சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர், ஒன்றிய குழுத் பெருந்தலைவர் எஸ்.டி.கருணாநிதி, திருபெரும் புதூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ந.கோபால், மாங்காடு நகரச் செயலாளர், நகர மன்ற துணை தலைவர் பட்டூர்.எஸ். ஜபருல்லா, குன்றத்தூர் நகர செயலாளர், நகர மன்ற தலைவர் கோ.சத்திய மூர்த்தி, திருப்பெரும்புதூர் பேரூர் செயலாளர், நகர மன்ற தலைவர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர், கழக மக்களவை குழு தலைவர், திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பு.கஜேந்திரன், திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழுத் பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய_நகர- பேரூர் கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள்(BLA 2), உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக அணிகளின் மாவட்ட-ஒன்றிய- நகர-பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திருபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 10 பூத் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட உள்ளனர்.

குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடி வாக்கம் மணி நன்றியுரை ஆற்றுகிறார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/1312/2025

இரண்டு உறை குறுகிய கால மறு மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம் - 6, 8, 10 & 13 மண்டலத்தில் உள்ள 68 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், மற்றும் இன்டர்லாக் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி சிப்பம் - 17, 18 & 30 (SPECIAL FUND 2025 - 26)

பணியின் உத்தேச தொகை : **குறைந்தபட்சம் ரூ.221.00லட்சம் அதிகபட்சம் ரூ.233.00 லட்சம்**

முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.06.2025 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 06.06.2025 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2551 / ஒப்பந்தப்புள்ளி / 2025

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து

மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு தொகுதி ஆனையூர் பகுதியில் அமைந்துள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் 1350 ஆவது சதய விழாவை முன்னிட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி அன்னாரது திருவுருவ வெங்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் சோழவந்தான், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பெரியசாமி, ஜி.பி. ராஜா, பெ.சசிகுமார், செல்வகணபதி, கலை கார்த்திகேயன், பாபு, முருகேசன், நவநீதகிருஷ்ணன் மற்றும் முத்தரையர் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட மல்லாக்கோட்டை பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்குவாரியில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பாறை சரிவு விபத்தின் போது உயிரிழந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த நபரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.04.00 இலட்சமும், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.01.50 இலட்சமும் மற்றும் தனியார் கல் குவாரி நிறுவனத்தின் சார்பில் ரூ.05.00 இலட்சமும் என மொத்தம் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண நிதியுதவியினை 22.05.2025 அன்று சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபியுடன் நேரில் சென்று வழங்கி, அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.